**09.06.2025**

அ.வ.எண்.**101/2020**

<u>வா.சா.**2** வீரமணி குறுக்கு விசாரணை</u>

**1.** வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் ஊர்காரர்கள் சொல்லி வந்தேன். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான்தான் சொன்னேன். எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் ஊரில் பொதுவான ஆள் என்ற முறையில் சாட்சியம் அளிக்க வந்தேன். எனக்கும் வாதிக்கும் என்ன உறவு முறை என்றால் சித்தப்பா மகன். வாதியும் என்னுடைய தந்தையும் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். மேற்படி தகவலை எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு என்ன வயது ஆகிறது என்றால் **39** வயது.

**2.** பொது பாதை காளியின் வகையறா அனுபவத்தில் உள்ளது என்று எதை வைத்து கூறுகிறேன் என்றால் ஊர்காரர்கள் சொல்வதை வைத்தும் மேலும் காலங்காலமாக அது பொதுபாதையாக தான் உள்ளது. **7** குடும்பத்தின் வகையறா யார் யார் என்றால் ஏழுமலை, அஞ்சலை, கன்னியம்மாள், பஞ்சாட்சரம், கோவிந்தசாமி, வெங்கேடசன் ஆகியோர்கள் குடியிருந்து வருகின்றனர். வாதியை தவிர்த்து மேற்சொன்ன நபர்கள் யாரும் பொது பாதையை பிரதிவாதி தடுத்தார் என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில்

வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஏற்கனேவே முன் பகை உள்ளது என்று கூறியுள்ளேன். எப்போதிலிருந்து உள்ளது என்றால் வழிபாதை பிரச்சனை சம்பந்தமாக 2010 மற்றும் 2018 ஆகிய வருடத்தில் பிரச்சனை ஏற்பட்டது.

3. பிரதிவாதி அவரது வீட்டை கட்டும் வரையில் இந்த பிரச்சனை இல்லை என்றால் வீட்டு கட்ட ஆரம்பிக்கும்போதே பிரச்சனை ஏற்பட்டது. வீடு கட்ட ஆரம்பிக்கும் வழக்கின் வாதி பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். பிரதிவாதிதான் வாதி மீது புகார் அளித்தார் என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதி கொடுத்த பிறகு பிரதிவாதி புகார் கொடுத்தார். மேற்படி புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே பஞ்சாயத்து எப்போது யார் முன்னிலையில் ஏற்பட்டதது என்றால் வருடம் ஞாபகமில்லை. ஊர்காரர் முன்னிலையில் ஏற்பட்டது. எந்தவொரு பஞ்சாயத்தும் ஏற்படவில்லை. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியலல்ல. எதன் அடிப்படையில் பொது பாதை இருக்கிறது என்று கூறுகிறேன் என்றால் வி.ஏ.ஓ கொடுத்த அறிக்கையிலிருந்து சொல்கிறேன்.

5. இந்த வழக்கில் 2 முறை நீதிமன்ற ஆணையர் இடத்தை அளக்க வந்தாரா என்றால் சரிதான். ஆனால் தவறு என்று அறிக்கையில் கூறியுள்ளார். நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் தாவா

சொத்தில் எந்தவொரு ஆக்கரமிப்பும் இல்லை என்று கூறியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி வீட்டின் பின் சுவற்றில் சிமெண்ட் பூச்ச வில்லை என்றால் சரிதான். பிரச்சனை உள்ளதால் நடவடிக்கை எடுக்கவில்லை. பிரதிவாதி தன்னுடைய வீட்டின் பின் சுவற்றை பூசுவதற்காக சராம் கட்டும்போதுதான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி சுவற்றை பூச்ச கூடாது என்று பிரச்சனைகாகதான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**6**. பொதுவழி என்ற சொல்லப்பட்ட பகுதியல் பொதுவான கிணறு உள்ளது என்றால் சரியல்ல. பாதைக்கு பக்கத்தில் உள்ளது. மேற்படி கிணற்றை ஊர்மக்கள் குடிநீருக்காக பயன்படுத்துகிறார்கள் என்றால் சரியல்ல. உண்மையிலேயெ பொதுபாதை இருந்திருந்தால் பொது மக்கள் அனைவரும் சேர்ந்து பிரதிவாதியின் மீது வழக்கு தொடுத்திருப்பாபர்கள் ஆனால் வாதிக்கும் பிரதிவாதிக்கும் முன்பகை காரணமாக வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய சித்தப்பா என்பதால்தான் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே என் சாட்சி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.